# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளிவருவது

Registered as a News Paper in Cey
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-கூச] யாழ்ப்பாணம்:- நந்தன வூ கார்த்திகை மீ உ௦உ வெள்ளிக்கிழமை (5 Dec. 1952) [இல - கூரு]


# "தமிழகம் சந்ததமும் நினைவுறுத்தும் பெருந்தகையார்"

## நால்வரை நன்கறியச் செய்த நாவலர் அவர்கள்

### சைவப்பணியில் தம்மை மறந்தார்

அன்னிய மதப் பாதிரிமார்கள் மதவெறிகொண்டு நாட்டைச் சூறையாடிக்கொண்டிருந்த காலம்! எப்படி?.... மந்தைக்கு ஆடு சேர்ப்பவன் போன்று மதத்திற்கு ஆள் சேர்த்த காலம்!! நம் நாட்டவரும் தம் நிலைமை இழந்து, தம் மதம் மறந்து, தேசீயத்தைத் துறந்திருந்த காலம்!!

"எப்பொழுது உலகில் தர்மம் அழிந்து அதர்மம் அதிகரிக்கின்றதோ அப்பொழுது நான் அவதரிக்கிறேன்" என்றுரைத்தார் கீதையில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா. இதற்கு உதாரணம் போலத் தோன்றினர் நம் நாவலர். கருணாமூர்த்தி காந்தி மகாத்மா மதவெறியை முறியடிக்கச் செய்ததுபோலவே அக்காலத்தில் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களும் மதவெறியை மற்றொருமுறையால் மண்கவ்வச் செய்தார்,

கீண்முடித் தனமாகக் கைக்கொண்ட மூடக் கொள்கைகளையெல்லாம் மண்முடிப் போகும்படி செய்தவர் நம் நாவலரே! மேன்மைகொள் சைவ நீதி உலகமெல்லாம் விளங்க வைக்கவே 18-12-1822 ல் யாழ்ப்பாணத்து நல்லூரில் அவதரித்தார். வம்சம் ஞானப்பிரகாசர் மரபு. இவரது பெற்றோர் கந்தப்பிள்ளையும் சிவகாமியம்மையுமாவர்.

இவர் சிறு வயதிலேயே செந்தமிழ், ஆங்கிலம், சங்கீதம் ஆகிய மூன்றும் நன்கு கற்றுணர்ந்து, செந்தமிழில் நன்கு பாண்டித்தியம் அடைந்திருந்தார். ஆரியமும் வேண்டிய அளவுக்கு அறிந்திருந்தார். இவர் வித்துவ சிரோமணி சேனாதிராய முதலியாரிடத்து நன்கு தமிழ் பயின்றவர். ஆங்கிலம் அரச பாஷையாகவும் உலகபாஷையாகவும் இருப்பதினாலும் இதையும் பீட்டர் பார்சிவல் என்னும் பாதிரியார் பாடசாலையிற் பயின்றார். அக்காலத்தில் இவருக்குச் சைவ உணர்ச்சி தளிர் விட்டுத் தழைக்கத் தொடங்கியது. நம் ஊருக்கு நன்மை செய்யவென்று மேலை நாடுகளிலிருந்து வந்த பாதிரிமார்கள் தாம வந்த நோக்கங்களை விபரீத முறையில் திணிக்கத் தலைப்பட்டனர். அவர்கள் இவருக்கு ஆங்கிலம் பயிலச் செய்ததற்குக் கைம்மாறாகப் போலும், இவரைக் கிறிஸ்து மத விவிலிய நூலை (Bible) தமிழில் மொழிபெயர்க்க உதவிபுரியும்படி கேட்க, இவரும் இசைந்து வேண்டிய உதவிகள் செய்து கொடுத்தார். இன்று ஆறுமுகநாவலரின் உதவி கொண்டு இயற்றிய தமிழ் விவிலிய நூல்தான் தரணியில் தலைசிறந்து விளங்குகின்றது, என்பது உலகறிந்த உண்மை. பயன் கருதாது நன்மை செய்வதன்றோ பெரியோர்க்கழகு! இது அன்றோ அழகு!! இது அன்றோ பெருமை!!!

#### கல்விக்குத் தக நின்றவர்

தாம் கற்ற நூலளவில் நில்லாது மீண்டும் மீண்டும் நூல்களைத் தேடிக் கற்றவர்; கற்ற கல்வியின் படி ஒழுகியவர்; மற்றவர்களுக்கும வழிகாட்டியவர். இவர் இலக்கண இலக்கியங்களில் மிக வல்லவர். இந்துமத உண்மைகளைச் சாதித்துப் போதித்தவர். இவர் காலத்தில மேலைத் தேசச் சட்டை தொப்பி நாகரிகத்தில் மூழ்கிய நம் மக்கள் தம் மொழியையும், தமிழ் நூல்களையும், சமயத்தையும் மறந்து ஒழுக்கங்களை ஒழித்தனர். புதிய நாகரிக மோகத்தால் நமது பழம் நலத்தை இழந்து, சமுதாயம் உருக்குலைந்து வாழ்வே அழை

**செல்வி லலிதாதேவி சின்னையா**
**கொழும்பு**
**விவேகானந்தவித்தியாலய ஆசிரியை**

குறையாகி நின்றது எல்லோருக்கும் தெரியுமே? தெரிந்தும், நாம் உறங்கினோம், உறங்குகிறோம், நாமும் ஏன அந்தப் பாதிரிமார்கள் போலக் கிளம்பி நமது சமயத்தைப் பரப்பலாகாது? என்று தோன்றியது நம் நாவலருக்கு. இவர் பேச்சுடன் நிற்கவில்லை, செயலிலும் முனைந்து அரிய பல தமிழ் நூல்களைத் திருத்திப் பிழையின்றி அச்சிட்டும் பல செய்யுள் நூல்களை வசன ரூபமாகச் செய்தும் சாதாரண மனிதருக்கும் விளங்கும்படி செய்தார். நமது சமயத்தைத் தூற்றிக் கேலி செய்தவர்கள் வாயைப் பிரசங்கங்களினாலும் வெளியீடுகளினாலும் அடக்கினார். தமிழ் மொழியை மறந்தவர்களை விரும்பிப் படிக்கச் செய்தார் அன்னிய மோகத்தால் பிறமதம் புகுந்த நம்மவரைச் சிவநெறி தழுவச் செய்தார்.

இவர் தமது இறுதிக் காலம் வரையும் பிரமச்சரியமே கடைப்பிடித்து, தேவார திருவாசகங்களை நன்கு படித்து, சீவகாருண்ணியத்திற் சிறந்து ஆண்மையிற் பொலிந்து, அன்பு, ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை, தூய்மை எனனும் குணங்களும் தாங்கி நின்றவர். இவர் காலத்தில் யாழ்ப்பாணத்தில் மதவெறி தலைவிரித்துத் தாண்டவம் ஆடியது. பாதிரிமார்கள் தட்டிக் கேட்க ஆளின்றித் தாம் நினைத்தவாறே மத மாற்றம் செய்தார்கள். பொது சனங்களுக்கு எழுத்தறிவு குறைவு என்று கூறிப் பாடசாலைகள் தொடங்கி ஆங்கிலம் புகட்டித் தமிழை மறக்கச் செய்ததுடன் நில்லாது பைபிளையும் நுழைத்தனர். மாணவர் மூளையை மயக்கினர். ஆடை, ஆகாரம், படிப்பு, வேலை, அழகான பெண் இவைகளையே பெற்றுக்கொள்ளப் பலர் அறியாத்தனத்தால் மதம்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

**தமிழகம்**
**நினைப்பொழியா**
**நாவலர் நற்றகையாரின்**
## குருபூசை
**வருகிற திங்கட்கிழமை**
**8—12—52.**

## தமிழுஞ் சுருதியும் காத்து வைத்தார்!

### வாழ்க்கைச் சுருக்கம்

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாகமங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமௌலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோதும்
மதம்பூத்த விநாயகன்றாழ் வணங்கி வாழ்வாம்.

— நாவலர்.

ஈழ நாட்டிலே யாழ்ப்பாணத்து நல்லூரிலே கார்காத்த வேளாண் குலத்திலே பாண்டி மழவன் குடியிலே யுள்ளவராகிய கந்தப்பிள்ளைக்கும் சிவகாமியம்மையாருக்கும் அரியதிருமகனாகத் திருவவதாரஞ்செய்தார் சித்திரபானு மார்கழி 5-ம்நாள் நாவலர் பெருந்தகை.

அவர் பண்டை நற்றவத்தாற் றோன்றினாராகலின் இளமையிலேயே அம்மை சரஸ்வதியின் அருள் பதிந்த நாவுடையராய்த் திகழ்ந்தார். ஒன்பதாம் ஆட்டைப் பருவத்திலேயே தந்தையார் பாடிய நாடகக் குறையை நிறைவேற்றினாரென்பது இதற்குச் சான்றுபகரும்.

சாவணமுத்துப் புலவர் சேனாதிராய முதலியார் என்னும் வித்துவசிரோமணிகளிடம் தமிழ்மொழி பயின்று, பீற்றர் பார்சிவல் பள்ளிக்கூடத்தில் ஆங்கிலம் கற்று, சிவஞான போதம் முதலிய

— ச. தியாகராசா —

சித்தாந்த நூல்களின் தனிச்சிறப்புணர்ந்து, தேவார திருவாசகத் தேனசுவை கண்டு, சிவாகமம் தரும் பொருளாமே காண்பான் வடமொழி வல்லுனராயினர்.

மதிவளம்பெருகி எத்துறை தன்னிலும் தனிவல்லுனராகி, தெய்வத் தமிழும் சைவப் பொருளும் விளக்கிப் பரப்ப வேண்டி, இல்லிற் புகாது நைட்டிகப் பிரமசரியம் மேற்கொண்டு, சோபான முறையில் தீக்கைகள் பெற்றுச் சிவ

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

### இறங்கிச் சென்று தொழுமின்!

திருச்சிற்றம்பலம்.

இறங்கிச் சென்று தொழுமி னின்னிசை பாடியே
பிறங்கு கொன்றைச் சடையனெங்கள் பிரானிடம்
நிறங்கள் செய்த மணிக ணித்திலந் தொண்டிழி
கறங்கு வெள்ளை யருவித் தண்கழுக் குன்றமே.

திருச்சிற்றம்பலம்.

## சாராயக்கடைகளை நீக்கப் பகிரங்கத் தேர்தல்

யாழ்ப்பாணத்திலுள்ள சாராயத் தவறணைகளை நீக்கப் பகிரங்கத் தேர்தல் 1952ம் ஆடு மார்கழி மீ 13-ந் உ ஆரம்பிக்கிறது.

**... தேர்தல் இடமும் திகதியும் ...**

| | | |
|---|---|---|
| பளை | 13-12-52 | சனிக்கிழமை. |
| வல்வெட்டித்துறை | 17-12-52 | புதன்கிழமை. |
| சாவகச்சேரி | 20-12-52 | சனிக்கிழமை. |
| பருத்தித்துறை | 22-12 52 | திங்கட்கிழமை. |
| சங்கானை | 3-1-53 | சனிக்கிழமை. |
| ஊர்காவற்றுறை | 7-1-53 | புதன்கிழமை. |
| யாழ்ப்பாணம் | 10-1-53 | சனிக்கிழமை. |

எல்லோரும் அன்பாக வந்து வாக்களிப்பு இடங்களில உங்கள உங்கள வாக்குச் சீட்டுகளில் சாராயத் தவறணை வேண்டாமென்று புள்ளடியிட்டுத் தாய்நாட்டின் தொண்டில் தலைமை பெறுங்கள் என்று வட இலங்கை மதுவிலக்கு மகாசபையார் ஓர் வேண்டுதல் விடுத்திருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாம்அரனாமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ். நந்தன ஹு கார்த்திகைமீ ௨௦ உ வெள்ளிக்கிழமை

## பாப்பா மெட்டிலே தோத்திரங்களா?

நாடகங்களிலே நாழிகைக்கொரு பாட்டுமெட்டு நாளுக்கொரு நவீனம் என்றவிதமாக நடைபெற்றாலன்றி அபிமானிகளை அணைத்துக்கொள்ள முடியாதென்பதை எவரும் அறிவர். யாப்பிலக்கணப் பாவினங்களிலும் இவ்வாறு புதுமை புகுத்திவிடத் தமிழ்ப்புலவர்கள் துணியமாட்டார்கள். துணிந்தபொழுதிலும் செந்தமிழன்பர்கள் செவிசாய்க்கார். புதுமை கதவும் தமிழ் எழுத்தாளர்களிற் சிலர் நாடகத்தாற் புலவர்கள்போல் நடித்துப் பன்னிரு திருமுறைத் தோத்திரப் பாக்கள் எல்லாராலும் பாராயணம் பண்ணக்கூடிய எளியநடையும் இனிமையுமில்லாதன வென்று கவலையுற்றுப் பாப்பாபாட்டுகள் மாதிரித் தோத்திரப் பாக்களமைக்க வேண்டும் என்று கருதுகிறார்களாம் என்னே இவர்கள் எண்ணம்! மதியின் மதமா? அன்றித் தமிழகத்தின் விதியின் விளைவா?

ஒரு தேவாரத்தை உதாரணத்திற்கெடுத்துப் பார்ப்போம்.

புழுவாய்ப் பிறக்கினும்
புண்ணியா வுன்னடி
யென்மனத்தே,
வழுவாதிருக்க வரந்தரவேண்டு
மிவ்வையகத்தே,
தொழுவார்க்கிரங்கி யிருந்தருள்
செய்பாதிரிப்புலியூர்ச்,
செழுநீர்ப் புனற்கங்கை
செஞ்சடைமேல் வைத்த
தீவண்ணனே.

பொன்மணிகள் போலப் பொலிந்து துலங்கும் புனிதமான சொற்கள், நன்கமைந்த பொருணயம், தண்ணிய தன்மையாற் கண்களில் நீருருகச் செய்யும் அமைவு. இறை உணர்ச்சி எழுப்பும் நெறி தவறா அமைப்பு. இவற்றை யெல்லாம் கழித்துவிட்டு தில்லானு, தெருப்பாங்கு முறையிலோ பாப்பாப் பாட்டு வகையிலோ தோத்திரஞ் செய்யத் துணிவாருமுண்டென்றால் என்செய்வேம்! எதற்காக இந்தப் புதுமுறை? இவற்றை இயற்றுபவர்களின் அகம்பாவமா, அல்லது தம்மைத் தாமே புகழ்ந்து விடுவதற்கா?

இத்தேவாரத்தின் சுவையிற், செழும் பொருளிற், செந்தமிழிற், பல்லாயிரத்திலோர் பங்கு பண்புடைய ஒரு தோத்திரத்தை இந்த நாடக நடையாளர் இயற்றும் ஆற்றல் பெறுவார்களா? என்று கேட்கிறோம்!

தித்திக்கும் தேன்பொழியும் திருவாசகத்தையுமா இனிமைபெற இலகுவாக்க எழுந்திருக்கிறார்கள்.

படப்பாட்டு மெட்டுகளிலே பாமனைப்பாடி மகிழ்கிறவர்கள் தங்கள் பாட்டிலே அந்த இன்பத்தை வைத்துவிட்டால் நன்று. தொன்று தொட்டு தூய உணர்ச்சியுடன் ஓதப்பட்டு வரும் தேவார திருவாசகங்களைச் சைவமக்கள் ஓதாதொழிவரென்றுள்ளுகிறவர்கள் உளராதலாலேயே உலகிலே சுழல்காற்றும் சூறாவளியும்என்றுமில்லாத இயற்கை எதிர்ப்பைக் காட்டி வீசுகின்றன.

கூட்டுப் பிரார்த்தனைக் கூட்டங்களிலே எங்கணும் பன்னிரு திருமுறைகளே பாடப்பெறுகின்றன. ஆனாற் சில விடங்களிலே இக்காலத்துச் சில கற்றுாரியற்றிய சொற்றெருகுப்புகளும் பாடப்பெறுவதாக அறிகிறோம்? பொதுக் கூட்டங்களில்நாடகமேடையில் இதரவிடங்களில் இந்தப் புதுவின அமைப்புகளை மனம்போனவாறு பாடிக் களிக்கலாமே! ஆலயங்களிலும் கல்விக் கழகங்களிலும் இவ் விதமான பாப்பாப் பாட்டுகளைத் தோத்திர முறையிற் புகுத்துதல் சைவத் தமிழருக்கிழுக்காவதாகும்.



இப்பெரியாரின் உயிர் சைவமுந் தமிழும்

# நாவலர் தின நியமம்

### இராத்திரி

3 மணி-4 மணி வரை சிவத்தியானமுஞ் சிவமூல மந்திர செபமும் தோத்திரமுஞ்செய்க.

4 மணி - 5 மணிவரை, திருவளுவர் பரிமேலழகருரையும் திருக்கோவையாருரையும் படிக்க.

5 மணி - 6 மணிவரை, தந்ததாவனமும் அநுட்டானமுஞ் சிவாலயப் பிரதக்ஷிணமுஞ் செய்க.

### பகல்

6 மணி-8 மணிவரை, Proof பரிசோதிக்க. 8 மணி-10 மணி வரை சிவபூசை செய்து போசனம் பண்ணுக. 10 மணி - 12 மணிவரை, சைவ சித்தாந்தம் படிக்க. 12 மணி-2 மணிவரை, புத்தக பரிசோதனஞ் செய்க 2 மணி - 4 மணிவரை, உரை செய்க. 4 மணி-5½ மணிவரை சம்ஸ்கிருதம் படிக்க. 5½ மணி-6 மணிவரை உலாவுக.

### இராத்திரி

6 மணி - 6½ மணிவரை, அநுட்டானம் பண்ணிச் சிவாலய தரிசனஞ்செய்க. 6½ மணி-9 மணிவரை புத்தக பரிசோதனஞ் செய்க. 9 மணி-10 மணி வரை புராண வசனமெழுதுக 10 மணி - 3 மணிவரை நித்திரை செய்க.

அமாவாசை பௌர்ணிமைகளிலும் பிரதமைகளிலும் சைவ சித்தாந்தம் முதலியவை படித்தலொழித்து, அவற்றிற்குரிய நேரத்திலே மற்றை நூல்கள் வாசிக்க.

சிவாலயப் பிரதக்ஷிணஞ்செய்யும்போது திருவாசக மனனம் பண்ணுக.

உலாவும்போது சித்தியார் சிவஞான போத மூல மனனம் பண்ணுக.

ஜன்ம நட்சத்திரந்தோறும் விசேஷ பூசைசெய்து, அட்டோத்திர சத நாமார்ச்சனை பண்ணுக. மாகேசுர பூசை செய்க. சுப்பிரமணிய சுவாமிக்கு சகச்ர நாமார்ச்சனை செய்விக்க.

பிரதோஷந்தோறும் தேவார தோத்திரத்தோடு சிவ தரிசனஞ் செய்க.

கார்த்திகை நக்ஷத்திரந்தோறும் கந்தரலங்கார தோத்திரத்தோடு சுப்பிரமணிய சுவாமி தரிசனஞ் செய்க.

கார்த்திகைச் சோம வாரந்தோறும் சிவசந்நிதியில் நெய் விளக்கிடுக.

சமய குரவர் நால்வர்க்கும் சேக்கிழார் நாயனார்க்கும், சந்தான குரவர் நால்வர்க்கும திருவள்ளுவ நாயனார்க்கும் குருபூசை செய்க.

வருஷந்தோறும் பெரிய புராணம், திருவிளையாடற்புராணம், கந்தபுராணம், உபதேச காண்டம், கோயிற் புராணம் திருவாதவூரடிகள் புராணம், காசிகண்டம் இவைகளை நியமமாகப் படிக்க.

(நாவலரவர்கள் கையெழுத்திலுள்ளபடி திரு.சித.மு.ப.சிதம்பரநாதச் செட்டியார் அவர்களுதவியது.)

## குரு தக்ஷிணை

—0—

தென்இந்தியா திருநெல்வேலி இட்டமொழி பஞ்சாங்க கணிதர் திரு. சிவசூரிய நாராயணபிள்ளையவர்கள் விருப்பின்படி (நல்லூர்) ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆறுமுக நவலர் பெருமானுக்குக் குரு தக்ஷிணையாகி இந்துசாதன நிதிக்குச் சேருமாறு இலங்கை காத்தான்குடி ஆரப்பத்தை திரு. சீனித்தம்பி தம்பிராசா அவர்கள் அனுப்பிய ரூபா பதினைந்து (15/—) அன்புடன் பெற்றும். — அதிபர்.

வள்ளன்மையும்
தமிழ்ப் பண்பாடும் வாழ்க!*

## இலங்கைத் தமிழர் கலாவிருத்திச் சங்கம், சிலாங்கூர்

நிகழும் கார்த்திகை 22-ம் திகதி (7-12-52) ஞாயிற்றுக்கிழமை மேற்படி சங்க ஆதரவில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் குருபூசையும் சேர். பொன். இராமநாதன அவர்கள் ஞாபகக் கொண்டாட்டமும் நடைபெறு மென்று காரியதரிசி திரு. வ. இராமநாதன் அவர்கள் அறியத்தருகின்றார்

## உயர்திரு. சுத்தானந்த யோகிகள் உபதேசம்

### புங்குடுதீவு

புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையிலே பேசும்பொழுது மக்கள் சமூகம் சிவமயமாகவே விளங்குகின்றது. உலக இயக்கமே கடவுளின் செயல். உங்களிடம் உலகளாவிய உள்ளம் உருவாதல்வேண்டும், சைவசமயத்தைப் பரப்ப வேண்டும். சைவமதங் குன்றிப் பிற மதங்கள் பரவுவதால் இப்பொழுதே அத் தொண்டாற்றத் தொடங்கவேண்டும் என்று கூறினார்.

### நுணுக்கல்:

நுணுக்கல் சனசமூக நிலைய வாசிகசாலையைத் திறந்துவைத்துப் பேசும்பொழுது நாம் கீழ்நோக்கங்களை அகற்றி அகமும் புறமும் தூயராய் ஒழுகவேண்டும். சரியை கிரியை யோகம் ஞானம் ஆகிய நான்கு படிகளிலும ஒழுக வேண்டும. எம் வாழ்வை இறைவனுக்கு அர்ப்பணஞ் செய்தல் வேண்டும என்று கூறினார்.

### காரைநகர்

காரைநகர் நடராச ஞாபக மண்டபத்திலே பேசும்பொழுது நாம் கடவுளை உண்மையாக வழிபடவேண்டும். நடராசப் பெருமானை அருச்சிப்பது அவசியம். அவரைச் சரணடைந்து வழிபடுதலால் தூய வாழ்வை எய்தலாம என்று கூறினார்.

### ஆரிய திராவிட பாஷாபி விருத்திச் சங்கம்

## ஞானத்தை மறந்து ஊனத்தை உள்ளல் தமிழர் இழிவுக்கு ஏது!

— T. P. மீனாட்சிசுந்தரனார்.

ஆரிய திராவிட பாஷாபி விருத்திச்சங்க ஆண்டுவிழாவின் இரண்டாம் நாள் தபால்மந்திரி திரு. சு. நடேசன் அவர்கள் தலைமையில் பன்மொழிப்புலவர் திரு. T. P. மீனாட்சிசுந்தரனார் "தமிழன் பண்பாடு" என்னும் பொருளில் ஓர் சிறந்தசொற்பொழிவாற்றினார்.

உணர்ச்சி ததும்பும் உரைகளை வாரிவழங்கும்பொழுது உலகறிந்த தமிழன், ஓரினமாய் வாழ்ந்த தமிழன் இன்று புற நாடுகளிலே அவமதிக்கப்படுதற்குக் காரணம் பண்டைப் பெருமையை மறந்து புறப்பொருளையே நோக்கி மயங்கி வயிற்றுச் சோற்றுக்காக மட்டும் வாழ்வதேயாகும்! உலகறிந்த பொருளாகிய தமிழன் இந்திய நாட்டைச் சிறப்படையச் செய்து உலகு போற்றும்படி எங்கும் பரந்து பண்பாட்டுடன் வாழ்கிறான். இந்திய நாட்டிலே சிறந்தவர்களெனக் கருதப்பெறுவோர் தமிழர்களே. தமிழர்களாலேயே இந்திய அரசாங்கம் தலைநிமிர்ந்து நிற்கின்றது. இத்தகைய தமிழன் ஞான நடனத்தை மறந்து ஊன நடனத்தை உள்ளத்தில் வைத்ததனாலேயே இன்றைய இழிந்த நிலைமை எய்தியதாகும். அரசியல் ஊழல்கள் ஒற்றுமையை ஒழித்துவிட்டன.

இலங்கைப் புத்தகோயில்கள் பல இந்திய வல்லுனரால் கட்டப்பெற்றனவென அறிய வருகின்றது. அன்று இருசாராரும் ஒற்றுமையாய் நெருங்கி வாழ்ந்தார்கள். இன்று போட்டியிலீடுபட்டிருக்கின்றனர். பௌத்தர் வளரத் தமிழன் செய்த உதவியை மறந்துவிட்டார்கள். அன்புடனும் அறத்துடனும் விளங்கவேண்டும என்று போதிக்கும் பௌத்தம் சதிசெய்யத் தொடங்குமானால் அது எப்படி வளரும் என்று வினவினர்.

---

## சைவப்பிரசங்கம்

காரைநகர் வியாவிற் சைவ பரிபாலன வித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக் கிழமை (28 - 11 - 52) முற்பகல் ஒன்பது மணியளவில் பண்டிதர் சு. இராமசுவாமி அவர்கள் தேவாரச் சிறப்பு என்னும் விஷயத்தைப் பீடிகையாகக் கொண்டு சிறந்த பிரசங்கஞ் செய்தனர். சைவ அன்பர்கள் தேவாரத்தின்சிறப்புக்களை நன்குணர்ந்து விதிப்படி கிரமமாக ஓழுகுவதால் சிவபெருமானின் திருவருளைப் பெற்றுப் பேரின்ப வாழ்வை அடையலாமென விரித்துரைத்தனர்.

வித்தியாலய மனேஜர் தேவார திருவாசகம் முதலிய சைவ சாஸ்திரங்களைச் சைவ மக்கள் பிழையற ஓதத்தக்கதாக வேண்டிய வகையில் அச்சிடுவித்துச் சைவ மக்களுக்குதவிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் குருபூசை கார்த்திகைமீ உ௨ நடைபெறுவது போற்றப்படத் தக்கதென்றும், அத்தொண்டுகளைத் தொடர்ந்து செய்பவராகிய சைவப் பெரியார் ஸ்ரீமாக். சு. சிவபாதசுந்தரம்பிள்ளை B A. அவர்கள் தலைமையில் நடைபெறுவது மகிழ்வடையததக்கதென்றும் இப்படியாய சைவத் தொண்டுகளைச் சைவர்கள் போற்றுதல் அத்தியாவசியம் மென்றும் இனிதுரைத்துச் சபையோர்க்கு நன்றி கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலைய மாற்றம்

J. இலுக்கும்புற L. D. S Ben தமது பல் வைத்தியத் தொழிலை யாழ்ப்பாணம் 1-ம் குறுக்குத்தெரு 37-ம் இலக்க நிலையத்திலே தொடக்கியிருக்கின்றார்.

M 177 28, 5, 12, 19, 26

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் வீரகத்திப்பிள்ளை இராசசேகரம். வழக்காளி, இல. 9065.

எதிராக

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி: என். எஸ். சேதுராசா செட்டி கைம்பெண் நாகமுத்து சாலம் சென்ற என். எஸ். சேதுராசா செட்டியின் ஆஸ்திக்கு பிரதிகாரியஸ்தராகவும். எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 9065 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி. பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை, 1952-ம் ஆண்டு டிசெம்பர் (மார்கழி) மாதம் 20-ந் திகதி (20-12-52) சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த லலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 35640/-ம் இதில் ரூபா 25000 க்கு 1-8 52 திகதி தொடக்கம் 14 10 52 திகதி வரைக்கும் 100 க்கு 6 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100 க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 800.

### காணியின் விபரம்

வட மாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதிவண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை கிழக்கிறை "புகுகின்ற உப்புக் குளக்கரை, அல்லது தாண்டிக் குளக்கரை" கெற்பரப்பு இரண்டு (2-ம்) குளி 4½ ம். இது யாழ்ப்பாணம் உலாந்தா எஸ்-ரீ. பிலளையால் 1944-ம் ஆண்டு மார்கழி மாதம் 10-ந் திகதி 86-ம இலக்கப் படத்தில் லொற 1 A 5 B ஆக விஸ்தாரிக்கப்பட்டபடி மூன்றுகடைக் கட்டிடங்களும் மற்றும வீடுகளும் வேறும் கட்டப்படும் கட்டிடங்களும் இன்னும மேலே குறிக்கப்பட்டிருக்கும படத்தில் லொற 1 A 5 Cல் உள்ள காணியிலும் கை ஒழுங்கையிலும் பாவிக்கும் உரித்தும் மற்றும் பயிர்களும். எல்லை: கிழக்கு, லொற் 1 A 5 A நாகலிங்கம் சுப்பிரமணியத்தின் ஆதனம். வடக்கு, ஸ்ரான்லிறோட்டு மேற்கு, அம்பலவாணர் தங்கவேலின் ஆதனம். தெற்கு வேலுப்பிள்ளையின் உரிமைக்காரருக் குரிய ஆதனம். இதடங்களும். முறபதிவு D 177/144

சின்னத்தம்பி-சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer.

தெல்லிப்பழை.
10-11-1952.
M 181 5-12

## அன்னை சாரதா தேவி

தூய அன்னை, சாரதா தேவியாரின் திருநாள் சனிக்கிழமை (6 12 52) மாலை 4 மணி தொடக்கம் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் உயர்திரு. சுவாமி அவிஞானந்தர் அவர்கள் தலைமையில் நடைபெறுமென்றும், அத்தருணம் பல்கலைச் செல்வர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் ஓர் சொற்பொழி வாற்றுவாரென்றும் அறியவருகின்றது.

## தேகவியோகம்

=O=

சைவப்பிரகாச யந்திரசாலை, திரு. த. செல்லையா அவர்களின் தாயார் ஸ்ரீமதி தம்பிப்பிள்ளை பொன்னுப்பிள்ளை அவர்கள் சென்ற திங்கட்கிழமை 1-12-52 இரவு தொண்ணூறும வயசிலே இவ்வுலக வாழ்வை நீத்தனரென அறிகிறோம்.

திருவருள் வழி அவர் சாந்தியடைவாராக.

## விளம்பரம்

உடுப்பிட்டிக்கிராமச்சங்கம்

ஷை சங்கத்தைச் சேர்ந்த கிராமங்களில் அரசினர் மான்யறோட்டு வேலைகளுக்கு1952ம்ஆ மார்கழிமீ 12 ந் உ காலை 9 மணிவரைக்கும் கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும்.

கேள்விப்பத்திரப் பிணைப்பணமாக ரூபா ஐம்பது, 1952 ம் ஆ மார்கழிமீ 10 ந் உ மாலை 1 மணிக்கு முன் இக் கந்தோரில் கட்டியவர்களுக்கே கேள்விப்பத்திரங்கள் எனைல் வழங்கப்படும்.

மேலும் றோட்டு வேலைகளின் விபரங்களைச் சங்கக் கந்தோரில் வந்து என்னிடம் அறியலாம்.

வடபகுதி ஸ்தலஸ்தாபன அதிபர் கந்தோரில் பதிந்த நாமாவளிகளுக்கே கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்.

இ. நா. சிவகுருநாதன்
ஷை சங்கத் தலைவர்

உடுப்பிட்டி
1—12—1952
M. 183 2, 5, 9—12—52.

## நட்டநிவாரணம்

யாழ்ப்பாணத்திலே புயல் விளைத்த பெரும் நட்டத்துக்கு நிவாரணஞ் செய்யும்பொருட்டு ரூபா11,000 உடன் தேவைக்கு அரசாங்கம் உதவியிருக்கின்றது. வீடுகள் அழிக்கப்பட்டோருக்கும் வேறுகதி இல்லாதோருக்கும் உடனே உதவி புரியுமாறு வடமாகாண அரசாங்க அதிபதி (Govt Agent) அனுமதி கொடுக்கப் பெற்றிருக்கின்றனர். நட்டம் மதிக்கப்படுகின்றது.

# தமிழுஞ் சுருதியுங் காத்துவைத்தார்!

முதலாம்பக்கத் தொடர்ச்சி

பூசை செய்து. சைவ மதத் திறத்தைச் சொல்லப் புகுந்தார். சொல்லின் வன்மை சொல்லற்கரியதாயது! இதனாலன்றோ திருவாவடுதுறை மகாசந்நிதானம் அவர்கள் இவர் நாவலர் என்று நன்கு மொழிந்தனர். பிறபல ஆதீனங்களிலும் பெரு வரிசைகள் பெற்றனர்.

பார்சிவல் என்னும் பாதிரியாருக்குப் பண்டு 'பைபிள்' என்னும் கிறிஸ்து வேதத்தை மொழி பெயர்த் துதவியதாற் பரசமயப் பேரறிஞருமாயினர். பாதிரிமார் செய்த சைவ நிந்தைகளைப் பொறுதவராய்ச் 'சைவதூஷணபரிகாரம்', 'விவிலிய குற்சிதம்' முதலியன வெளியிட்டும், சிவதலங்கள் தோறும் பல பிரசங்கம் செய்தும், வட்டு நூல்களை அச்சுவாகனம் ஏற்றியும், யாழ்ப்பாணத்திலும், சிதம்பரத்திலும் சைவம் பிரகாசிக்க வித்தியாசாலைகள் அமைத்தும், பாலபாடங்கள், சைவவினாவிடைகள், திருவிளையாடல் பெரியபுராண வசனங்கள், இலக்கண வினாவிடை, இலக்கணச் சுருக்கம் முதலிய மிகப்பல நூல்களும் ஆக்கியும், கோயிற்புராணம், சைவசமய நெறி, நன்னூற்காண்டிகை முதலிய உரைகளை எழுதியும் பலப்பல வழிகளால் தெய்வத் தமிழும் சைவத்திருவும் தனிப் பெரும் பீடத்திற் றிலங்குமாறு வாழ்நாள் முழுதும் திருத்தொண்டாற்றினர். இதனாலேயே,

'நல்லைநக ராறுமுக
நாவலர் பிறந்திலரேற்
சொல்லுதமி ழெங்கே
சுருதியெங்கே—எல்லவரும்
ஏத்துபுரா ணாகமங்க
ளெங்கேப்ர சங்கமெங்கே
ஆத்தனறி வெங்கே யறை'.

என்ன இசையொலிஎழுந்தது! ஈழத்தில் மாத்திரமன்று இந்தியாவிலுமே பண்டு மாத்திரமன்று இன்றுமே அவர் புகழ் பரவி நிலவுகின்றது. ஆதலினாலன்றோ ஸ்ரீ சுந்தரானந்த அடிகளும்,

கல்வியின் வரம்பு கண்டோன்
கடவுண்மாக் கலைக ளெல்லாம்
வல்லவன் பிரம சாரி
யானெனத் தமிழ்பொ ழிந்து
செல்வமுந் திருவு மோங்கச்
சிவநெறி செழிக்க வந்தோன்
நல்லவர் போற்று நல்லூர்
நாவலன் வாழ்க மாதோ!

என வாழ்த்தினர்.

இத் தகைய பெருந்தகை! ஐந்தாங் குரவரென வழிபாடாற்றப்பெறும் பேறுடைய பெருமான், அன்னவருடைய திருவடிச்சுவடுகளைப் பின்பற்றி இன்புற்று வாழும் மரபினில் வந்த சைவமக்களாகிய நாங்கள் ஒவ்வொருவரும் மேன்மை கொள் சைவநீதி உலகெலாம் விளங்குமாறு தூய தொண்டாற்றும் பேறுடையராய்த் திகழ்வோமாக.

வாழ்க நாவலர் புகழ்!
வாழ்க திருத்தொண்டு!
சுபம்!

## சாராய நீக்க ஆலோசனைக் கூட்டம்

சாவகச்சேரிப்பட்டினத்திலுள்ள சாராயக் கடை நீக்க வாக்கெடுப்பைப்பற்றி ஆலோசிக்கும்பொருட்டுச் சனிக்கிழமை 6-12-52 மாலை 6 மணிக்கு வாணன்புலம (6ம் வட்டாரம்) கந்தசுவாமி கோயில் வீதியில் ஓர் பகிரங்கக்கூட்டம் நடைபெறுமென்றும் அத்தருணம் வட இலங்கை மதுவிலக்கு மகாசபைத் தலைவர் Dr. C. குருசாமி அவர்கள், காரியதரிசி திரு. K. கவரத்தினம் அவர்கள், திரு. த குமாரசாமிப்புலவர் முதலிய அறிஞர்கள் சொற்பொழிவாற்றுவார்களென்றும் அறியவருகின்றது.

## விற்பனைக்கு

ஒஸ்ரின் A 40 கரிய யந்திரவண்டி (Black Car) EY1820 11 மாசம 14,000 மைல் ஓடியது. சொந்தக்காரன் சாரதி. சிறந்த நிலைமை. விண்ணப்பிக்கும் விலாசம் இடைக்காடர் 29 ம் இலக்கம் 42 ம் ஒழுங்கை வெள்ளவத்தை, TELEPHONE 81002.

M. 185 5—12—52.

## விற்பனவு

யாழ்ப்பாணம் உரும்பிராய் தெற்குச் சந்தியில் ஒரு கல்வீடும வளவும் 4½ பரப்புடன் விரும்புவோர் விண்ணப்பிக்கவும்.

( C/o. இந்துசாதனம் )

M. 179 28, 2, 5.

சமூக வாழ்க்கையைச் சித்திரிக்கும்
சுசீலாவின் காதல்
யாழ். நகர மண்டபத்தில்
ஐக்கிய இயக்க உத்தியோகத்தர்களால்
1952-ம் ஆண்டு
மார்கழி மீ 6-உ சனிக்கிழமை
சைவபரிபாலனசபை நாவலர் ஆச்சிரம நிதிக்காக
மிக விமரிசையாக நடத்தப்படும்

# உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

இவ்வாரப் பலன்கள் 7—12—52——13—12—52

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

இந்த வாரம் போட்டி யிடுவோரை வெல்லக்கூடியதாயிருக்கும் புதியமுயற்சிகள் சித்தியாகும். ஆனால் குடும்ப விஷயங்கள் சிக்கலாயிருக்கும். இனத்தவர்களுடைய தொடர்பில் கவனமாயிருக்கவும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

இந்த வாரம் கவனமாயிரா விட்டால் நடுநிலை தவறிய நண்பரும தொடர்புடையோரும் உம்மைக் கஷ்டத்துக்குள் விடக்கூடும். பிதாவழி இனத்தவர்களாலும் தொந்தரவுக்கிடமுண்டு. செலவதிகரிக்கும். ஆனால் வேண்டிய பணம் வரும்.

**மிதுனராசி** மிருகசீரிடம, 3 4, திருவாதிரை,புனர்பூசம் 1,2,3.

இந்த வாரத் தொடக்கம் குடும்ப விஷயங்கள் திருத்த வேண்டும். போட்டியிடுவோரை வெல்லுதல் நிச்சயம். தேக சுகத்தைப்பற்றி விசேஷமாய்க் கவனிக்கவேண்டும். வார இறுதியிற் சில வினோத நிகழ்ச்சிகளுக்கிடமுண்டு.

**கடகராசி** புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.

முக்கியமான மாற்றங்களைச் செய்யற்க. குடும்பத் தொந்தரையும் அவதூறும் எழக்கூடும். புது முயற்சிகளைக் கொண்டு நடத்த முடியாமலிருக்கும். நண்பர்களிடம் நம்பிக்கையீனம் ஏற்பட இடமுண்டு.

**சிங்கராசி** மகம், பூரம், உத்திரம, 1ம் பாதம்.

சிறு குடும்பக் கோளாறுகளைத் தவிரப் பொதுவாக நன்மைபயக்கக்கூடிய வாரம். வாக்குவாதங்களிற் குட்படாதிருந்தால் எல்லாம் செவ்வனே முடியும். கிழமை முடியுமுன் சத்துருக்களில் ஒருவர் வெட்கித் தலைகுனிய நேரிடும்

**கன்னிராசி** உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

ஒருவித முடிவுக்கும் வரமுடியாத மன அமைதியீனம் இருக்கும். ஆனால் தேகநலம் சீருடையும். உத்தியோக சம்பந்தமான சிறு சச்சரவுகள் வரக்கூடும். கிழமை இறுதியில் நண்பர்கள் மிகவும் உதவியாக இருப்பார்கள்.

**துலாம** சித்திரை 3,4ம பாதம் சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்

வாகனமூலம் இலாபத்துக்கிடமுண்டு. தேவையானவர்களுடன் பழகச் சந்தர்ப்பம் வரும். வியாபாரவகையிலும் தொழில் முறையிலும் நிதானமாக நடந்துகொள்ளக்கூடிய ஆற்றல் உண்டாகும்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அனுஷம், கேட்டை.

நண்பர்கள் மிக மிக உதவிபுரிவார்கள். சகோதரங்களைப் பற்றியோ, இட்டிய சுற்றத்தவர்களைப் பற்றியோ நற்செய்தி கிடைக்கும். பண நிலையிலும் நன்மையை எதிர் பார்க்கலாம்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1 ம் பாதம்.

இவ்வாரம் பணம் பெறக்கூடியதாயிருக்கும். ஆனால் அதற்குத் தக்க செலவுமுண்டு. ஞாயிற்றுக்கிழமை அமைதியைக் குலைத்துவிடும். மற்றைய நாட்கள் வியாபாரவகையிலோ சொந்த அலுவல்களிலோ நன்மையைக் கொடுக்கும்.

**மகராசி** உத்தராடம் 2,3,4ம் பாதம்திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

முதல் மூன்று நாட்களும் முற்றிலும் மனக்குழப்பத்தை யுண்டுபண்ணும். எவ்வழியிலும் முட்டுக்கட்டையே எதிர்ப்படும். புதன் கிழமைக்குப் பின் நிலைமை மாறி நன்மையளிக்கும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.

ஞாயிறு திங்கள் செவ்வாய் தொழிலுக்கும் வியாபாரத்துக்கும் உகந்தவை. நடு வாரத்தில் இரகசிய எதிரிகளும் அவதூறு சொல்பவர்களும் தோற்றுவார்கள். ஈற்றில் பழையபடி நன்மை ஏற்படும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

முக்கியமான அலுவல்களிருந்தால் வற்றை வியாழக்கிழமைக்குள் ஒப்பேற்றி முடிக்க, வியாழன் வெள்ளி சனி மூன்று நாட்களும் அவதானமாகக் கழிக்கப் படவேண்டும். தேகசுகக்குறைவும் நண்பர்களுடன் அபிப்பிராயபேதமும் காணப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகம் சந்ததமும் நினைவுறுத்தும் பெருந்தகையார்

முதலாம் பக்கத் தொடர்ச்சி

மாறினர். அந்தப் பாதிரிமார்கள் அத்துடன் நில்லாது இந்து மதத்தின்மீது நிந்தனையாகப் பல கட்டுரைகள் வரைந்து பத்திரிகைகளிலும் பிரசுரஞ் செய்தனர். ஆறுமுகநாவலர் அவைகளுக்கெல்லாம் தகுந்த விடைகளும் கண்டனங்களும் எழுதித் தமிழ் மக்களைத் தூக்கத்தினின்றும் தட்டியெழுப்பி விழிப்படையச் செய்தார். இன்னும் வேண்டிய இடங்களில் போதனையும் செய்து நம் மக்களைப் போலிப் பாதிரிமார்களின் மாய வலையிற் சிக்கவிடாது காப்பாற்றினர். நம் நாட்டிற்கு நன்மை செய்து விட்டோமென்று தம்பட்டம் அடிக்கும் கிறிஸ்த மதக் குருமார்கள் அந்தக் காலத்தில் செய்த அநீதிகள் எழுத்தில் அடங்காது. விபூதி அணிந்து கிறிஸ்த பாடசாலைக்குச் சென்றால் குற்றமாம். வாழையிலையில் உணவருந்தினல் குற்றமாம். தானே கனியாத பழத்தைத் தடிகொண்டடித்தும் கனியச் செய்யலாம் அல்லவா? இவ்வாறே நம் நாட்டில் அன்னிய மதங்களைப் பரப்பினர். தடிகொண்டடித்த பழத்தின் முடிவு என்ன என்று அறியார்போலும் அந்தக் கொடியவர்கள். இவைகள் எல்லாவற்றையும் கண்டு தரியாத நம் பெரியார் கல்விச்சாலைகளும், பிறவும் வேண்டுமென்று உணர்ந்தார் வேண்டுவன செய்தார். இவர் யாழ்ப்பாணம், வண்ணர்பண்ணையில் சைவப்பிரகாச கலாசாலையை ஆரம்பித்தார். தமிழ் மக்களின் இதயஸ்தானமாகிய சிதம்பரத்திலே ஒரு வித்தியாசாலையையும் தாபித்தார். பயில்வதற்குப் பாலபாடங்களையும் எழுதி வைத்தார். இன்று நாவலர் பாலபாடங்களுக்குத் தனி மதிப்பு இருப்பது உள்ளங்கை நெல்லிக் கனி.

## சாதுரியத் துரிதம்

நாவலரின் வாழ்க்கையில் பல சுவையான சம்பவங்கள் நடந்திருக்கின்றன. அவற்றில் ஒன்று இங்கே காண்க. வெள்ளைக்கார நீதிபதியொருவர். ஒரு வழக்கிற்குச் சாட்சியம் கூற கூண்டில் ஏறினர் நம் நாவலர். நீதிபதி இவரைச் சாமானிய மனிதரென்று எண்ணி வினக்கள் பல வினவினர். ஆங்கில அறிவு நிரம்பிய நம் நாவலர் நீதிபதியது குறுகிய மனப்பான்மையைக் குறிப்பாலுணர்ந்து நீதிபதியை வெட்கமடையச் செய்ய எண்ணிக் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் ஆங்கிலத்தில் விடை பகர்ந்தார். சாமானிய மனிதரென்று எண்ணியவரிடமிருந்து தெளிந்த ஆங்கிலம் வருவதைக் கேட்க, நீதியரசருக்குக் கோபம் வீறிட்டது. உடனே தமிழில் விடையளிக்குமாறு கட்டளையிட்டார். நீதியரசர் செருக்கையுணர்ந்த நம் நாவலர் தமிழில கடினமான செய்யுள் ரூபமாகச் சாட்சியம் முழுவதையுஞ் சொன்னர். நீதி மனற மொழிபெயர்ப்பாளர் நின்று திரு திருவென்று விழித்தாராம். நீதியரசர் மொழிபெயர்ப்பாளரைப் பார்த்து, "ஏன் தயங்குகிறீர்," என்று கேட்க, மொழிபெயர்ப்பாளர், நாவலர் பேசிய தமிழ் தனக்கு விளங்கவில்லை என்று கூறினர் நீதியரசர் நாணமடைந்து தலை குனிந்தார். பின்னர் நாவலர் தம்மிடம் கல்வி பயின்ற தரணி (Proctor)ஒருவர் அவ்விடம் இருக்கக் கண்டு அவரை மொழி பெயர்க்கும்படி சொன்னர். நீதி நிலயத்தில் இருந்த அனைவரும் அதிசயித்தனர். என்னே நம் பெரியாரது சாமர்த்தியம்!

ஆறுமுகநாவலர் இயற்றிய சில நூல்களாவன சைவவினவிடை, நன்னூல் உரை முதலியனவும், இலங்கைப் பூமிசாத்திரம், பெரிய புராண வசனம் முதலியவைகளும் பிறவுமாம்,

இவர் இலங்கையில்மாத்திரமன்றி இந்தியாவிலும் தனிமதிப்புப்பெற்றார். நாவன்மையின் நயத்தாலன்றோ 'நாவலர்', என்னும் பொருத்தமான பட்டம் திருவாவடுதுறை மடாதிபதிகளால் அளிக்கப்பெற்றது. பிரபல சந்நிதானங்களாற் பாராட்டப்பெற்றார். நமது நாவலருக்கும், சில பாதிரிமார்களுக்கும் இடையில் நடந்த சில தர்க்கங்களை நாம் எண்ணும்பொழுது அந்தக் காலத்தில் மணிவாசகர் புத்தரை வாதில் வென்ற செய்தி நினைவுக்கு வருகின்றது. இவர் சமய முன்னேற்றத்துடன் நில்லாது அக்காலத்தில் இருந்த அரசியலிலும் பங்குபற்றினர், என்பதற்குச் சில ஆதாரங்கள இருக்கின்றன. நாவலர் அரசியலில் மேடை ஏறாதவிடினும் வேண்டிய விடங்களில் தக்க பக்க பலம் கொடுத்து வந்தார். ஒருபோது இலங்கைச் சட்டசபைப் பிரதிநிதி பதவிக்கு சேர். பொன்னம்பலம் இராமநாதனும் திரு. பிரிட்டோ என்ற கிறிஸ்துவரும் போட்டியிட்டனர். நாவலரவர்கள் கவர்னர் ஜெய்ஸ்லாப்டனுக்கு நேரே மனுச் செய்து ஊர் ஊராக, பொன்னம்பலம் இராமநாதனை ஆதரித்துப் பிரசாரம் செய்தார். இறுதியில் இராமநாதன் அவர்களையே ஜய கோஷத்துடன் சட்ட சபையில் வீற்றிருக்கச் செய்து அளவற்ற நலங்களும் செய்ய மூலகர்த்தாவாக இருந்தார். ஆறுமுகநாவலர் தமது சமய உண்மைகளை நிலைநாட்ட அஞ்சா நெஞ்சத்துடன் போராடியவர். இவர் தமிழ்க் கல்வியை விருத்தியடையச் செய்ததோடு ஆங்கிலக் கல்வியையும் நம்மவர்க்கு ஊட்ட விரும்பி உழைத்ததன் பயனாகப்போலும், பிறகாலத்து வந்த பெரியார்களால் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, பரமேஸ்வரக் கல்லூரி, இராமநாதன் கல்லூரி முதலிய கல்லூரிகள் இன்று கிளைவிரித்தோங்கிப் பல்லாயிரம் மாணவருக்குச் செந்தமிழ்க் கல்வி, சமயக் கல்வி, ஆங்கிலக் கல்வி அனைத்தும் ஒருங்கே ஊட்டுகின்றன. நாவலர் கனவுகளையெல்லாம் நனவாகச் செய்த பெரும் புண்ணியம் இக்கல்லூரிகளை நிறுவிய பெரியாரைச் சாரந்ததாகும்.

நாவலர் கண்ட கனவுகள் எல்லாம் நனவாகின்றன என்பதற்குப் பல சான்றுகள் உண்டு, உதாரணம் போர்த்துக்கேயர் செருக்கால் தரை மட்டமாக்கப்பட்ட திருக்கேதீஸ்வரம் மீண்டும் புனருத்தாரணம்பெற வேண்டும் என்று விரும்பினர். முயன்றார். அக்கால மக்கள் அவர் ஆசைக்கு ஆதரவுகாட்ட முன்வரவில்லை. நாவலர் மறைந்த பல வருடங்களின் பின்னே நம்மவர் நாவலர் நினைவுகளை எல்லாம் நிறைவேற்றிவைக்கத் தலைப்பட்டுக் கங்கணங்கட்டி வேலை செய்வது பலரும் அறிந்த உண்மையே. அன்று நாவலர் இந்து ஆலய பரிபாலனங்கள் எல்லாம் சீர்பெற வேண்டும் என்று பத்திரிகைகளில எழுதியும் கூட்டங்களில் பேசியும் வந்தார். வேண்டிய இடங்களில் அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் அவர் எழுதினர். ஆனல் இன்றுதான் நாங்கள் அந்தப்பெரியாரின் கூற்றை உணருகிறோம். அரசாங்கம் ஆலய பரிபாலன விசாரணைச் சபையை நியமித்துச் சட்டம் இயற்ற ஆவன செய்ய உத்தேசித்திருப்பது சென்ற இரண்டொரு வருடங்களில் நடந்தவைகளேயாகும்.

நாவலர் காலத்தில் விளங்கிய மறு பெரியார்கள் வட இந்தியாவில சுவாமி தயானந்தர், தென்னிந்தியாவில் அருட்சுடர் வள்ளலார் இராமலிங்க சுவாமிகளுமாவர். நமது நாவலர் காலத்தில் ஒரு சர்வ மத சங்கம கூடியிருந்தால் நாம் உண்மையில் நாவலர் அவர்களையே அனுப்பியிருப்போம். இவ்வளவு வீறுகொண்ட வலிமை படைத்த பெரியார் தமது 57வது வயதில், தமிழகமும் சிறப்பாக சைவ மக்களும் நின்று "எந்தை நாவலரே! எம்மை விட்டுப் போனீரே!" என்று கலங்க 5-12-1879 லன்று நம்மை விட்டுப் பிரிந்து இறைவன் குஞ்சித பாத நிழலை அடைந்தார்

நல்லை நகர் ஆறுமுக
நாவலர் வந்திலரேற்
சொல்லுதமி ழெங்கே?
சுருதியெங்கே—எல்லவரும்
ஏத்துபுரா ணுகமங்கள்
எங்கேப்ர சங்கமெங்கே?
ஆத்தனறி வெங்கே அறை?

நமச்சிவாய வாழ்க! நாதன் றாள் வாழ்க!! இவனும் சில காலம் வாழ்ந்திருந்தால் ... ... ... ஆ! எவ்வளவு அரிய செயல்களை எல்லாம்செய்திருப்பார் நம்நாவலர். தமது இறுதி மொழிகளில், "நான் இருக்கும்போதே ஒரு சைவப் பிரசாரகரைத் தேடிக் கொள்ளுங்கள். இன்னும் எத்தனையோ படித்தவர்களும் பெரியார்களும் வருவார்கள. ஆனல உங்கள் நிந்தனைகளை யெல்லாம் பொறுத்துக்கொண்டு கைம்மாறு கருதாது சமயத்தைப் போதிக்க ஒருவரும் வரார்", என்றார். உண்மை! உண்மை!! இன்னும் ஒரு நாவலரை எங்கே காண்போம். ஆறுமுக நாவலரைப் போலேஅவதாரமில்லைஇனிமேலே. அவரே வரவேண்டும். இறைவனை வேண்டுவோம்! அவர் வழியைப் பின்பற்றுவோம்! தமிழர்களுடைய ஒழுக்கம் சமயம் முதலிய நெறிகளினின்றும் விலகியவர்கள் தமிழர்கள் என்றுகூற அருகதை அற்றவர்கள் என்பது இவருடைய சரித்திரத்தைத் துருவித் துருவி ஆராய்ந்தால் நன்கு புலப்படும். கிறிஸ்த மதக் குருமார்களுடைய அட்டகாசத்திற்கு முற்றுப்புள்ளியிட்டுத் தமிழர்களைத் தலையெடுக்கச் செய்த பெரியாரைப் போற்றி அவர் காட்டிய வழியில ஒழுகுதல் நம் கடமையல்லவா?

கல்வியின் வரம்பு கண்டோன்;
கடவுண்மாக் கலைகளெல்லாம்
வல்லவன் பிரமசாரி,
வானெனத் தமிழ் பொழிந்து,
செல்வழந் திருவு மோங்கச்
சிவநெறி செழிக்க வந்தோன்;
நல்லவர் போற்று நல்லூர்
நாவலன் வாழ்க மாதோ!
—சுவாமி சுத்தானந்த பாரதியார்


உ

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்

## வெளியிட்ட நூல்கள்

| | | ரூ. | ச. |
|---|---|---|---|
| கந்தபுராணம் (செய்யுள்) | ... | 8 | — |
| கந்தபுராணம் வசனம் | ... | 5 | — |
| திருவிளையாடற் புராணம் செய்யுள் | ... | 3 | 50 |
| திருவிளையாடற் புராணம் வசனம் | ... | 2 | — |
| பாரதம் ஆதி பருவம் உரை | ... | 3 | 50 |
| சேது புராணம் | ... | 3 | — |
| இராமாயணம்—பாலகாண்டம் (குறிப்புரை) | | 2 | 50 |
| நன்னூற் காண்டிகையுரை | ... | 3 | 50 |
| ,, விருத்தியுரை | ... | 3 | 50 |
| அருட்பா | ... | 1 | 75 |
| சைவசமய நெறியுரை | ... | 1 | 25 |
| பெரியபுராண வசனம் | ... | 2 | 50 |
| பெரியபுராணம் செய்யுள் | ... | 5 | — |
| நாவலர் சரித்திரம் | ... | 1 | 25 |
| இலக்கணச் சுருக்கம் | ... | 1 | — |
| சைவ வினவிடை (1) | ... | | 20 |
| சைவ வினவிடை (2) | ... | | 65 |
| முதலாம் பாலபாடம் | ... | | 20 |
| இரண்டாம் பாலபாடம் | ... | | 35 |
| மூன்றாம் பாலபாடம் | ... | | 65 |
| நான்காம் பாலபாடம் | ... | 1 | 75 |
| சிவாலய தரிசன விதி | ... | | 20 |
| அபிராமியந்தாதி யுரை | ... | | 25 |
| திருக்குறள் உரை | ... | 5 | — |
| திருக்கோவையார் உரை | ... | 3 | — |
| கொலைமறுத்தலாதி | ... | 1 | 50 |
| திருமுருகாற்றுப்படை | ... | | 25 |
| தாயுமானசுவாமிகள் திருப்பாடற்றிரட்டு | ... | 1 | 25 |
| அகத்தியர் தேவாரத் திரட்டு | ... | | 25 |
| நித்தியகரும விதி | ... | | 15 |
| பட்டினத்துப்பிள்ளையார் திருப்பாடற்றிரட்டு | | | 15 |
| கந்தரலங்காரம், கந்தரனுபூதி | ... | | 15 |
| மதுரை அறுபத்துநான்கு திருவிளையாடற் போற்றிக் கலி வெண்பா | ... | | 05 |
| விநாயக ரகவல | ... | | 10 |
| சரஸ்வதி யந்தாதி | ... | | 05 |
| துண்டிவிநாயகர் திருவருட்பா | ... | | 05 |
| விநாயககவசம் சிவகவசம், சக்திகவசம், சரசுவதிதோத்திரம் இலக்குமி தோத்திரம் | | | 10 |

இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

வண்ணர்பண்ணை, யாழ்ப்பாணம். மனேஜர், சைவப்பிரகாசயந்திரசாலை.



L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நகைகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதர்ஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
=0=
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
விலாசம்:
68, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.



## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சகிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏறபடும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
Std. 14 20-11-46—20-11-49. சிறுப்பர்.


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponne, Jaffna on Friday. December 5 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org